MC.43/2024

16.06.2026

PW2 - அனுசுயா, க/பெ. பாபு, வயது – 65

**மனுதாரர் ஆஜர் .**

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம் –11.52 A.M**

**விசாரணை முடிக்கப்பட்டநேரம் –12.05 P.M.**

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 16.06.2026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

உங்கள் மகளின் திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது என்றால் சரிதான். உங்கள் மகள் என்ன படித்துள்ளார் என்றால் பனிரெண்டாம் வகுப்பு படித்துள்ளார். தற்போது உங்கள் மகள் என்ன வேலை செய்கிறார் என்றால் வீட்டில் தான் உள்ளார். நீங்கள் என்ன பணி செய்கிறீர்கள் என்றால் நான் வீட்டில் தான் இருக்கிறேன். உங்கள் கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் விவசாயம் செய்கிறார். எந்த ஊரில் விவசாயம் செய்கிறார் என்றால் பொம்மிநாயக்கன்பட்டியில் விவசாயம் செய்கிறார். உங்களுக்கு விவசாய நிலம் எவ்வளவு விஸ்திரணத்தில் உள்ளது என்றால் கிரயம் கொடுத்துவிட்டோம். கொஞ்சம் நிலம் குத்தகைக்கு கொடுத்து சம்பாதித்து வருகிறீர்கள் என்றால் இல்லை. எந்த ஆண்டு உங்கள் மகளுக்கு திருமணம் நடந்தது என்றால் எனக்கு துல்லியமாக நினைவில்லை. திருமணம் ஆனதிலிருந்தே வாழ்க்கை சரியில்லாமல் உங்கள் மகள் உங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவாரா என்றால் அப்பா, அம்மாவை பார்க்க என் மகள் வருவார். உங்கள் மருமகன் வேலையில்லாமல் தற்போது உள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. உங்கள் மகளும், மருமகனும் ஒன்றாக

இருந்தபோது நாட்றம்பள்ளியில் பட்டாசு கடை நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். பட்டாசு கடையில் வியாபாரம் இல்லாமல் அந்த கடை நடத்துவதை நிறுத்திவிட்டார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. தற்போது நீங்கள் எங்கு வசித்து வருகிறீர்கள் என்றால் பொம்மிநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன். உங்கள் மகளுக்கும் மருமகனுக்கும் குழந்தைகள் எதுவுமில்லை என்றால் சரிதான். உங்கள் மகளும் மருமகனும் திருமணமாகி எத்தனை ஆண்டுகள் ஒன்றாக வசித்து வந்தார்கள் என்றால் நான்கு ஆண்டுகள். உங்கள் மகள் தட்டச்சு பயிற்சி பெற்றுள்ளார் என்றால் இல்லை. உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு மகள், ஒரு மகன் மேலும் அந்த மகன் காலமாகிவிட்டார். பொம்மிநாயக்கன்பட்டியில் உங்களை மிட்டாதாரர் என்று தான் அழைப்பார்கள் என்றால் சரிதான். உங்கள் இரண்டாவது மகள் வேலைக்கு போகாமல் வீட்டில் தான் உள்ளார் என்றால் சரிதான். உங்கள் குடும்பம் மிட்டாதாரர் குடும்பம் என்ற காரணத்தினால் யாரும் வேலைக்கு செல்லாமல் வீட்டில் உட்கார்ந்து தான் சொத்தை குத்தகைக்கு கொடுக்கும் வருமானத்தில் காலம் தள்ளுகிறீர்கள் எனவும் அதன் காரணமாக தான் உங்கள் மகளும் மருமகனுடன் வாழாமல் வந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மகள் மருமகனுடன் வாழாமல் வந்ததற்கான காரணம் என்னவென்றால் காரணம் எதுவும் நீங்கள் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு குறித்து உங்களுக்கு எதுவும் தெரியாது எனவும் உங்கள் மகளுக்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.06.18 16:32:28 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.